**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,**
**ஸ்ரீரங்கம்,**
**முன்னிலை : திரு.சி. கருப்பசாமி, பி.ஏ., பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், ஸ்ரீரங்கம்.**

**2023–ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 25–ஆம் நாள், புதன்கிழமை**
**ஆண்டு பட்டிகை வழக்கு எண். 291/2019**
**CNR.NO.TNTP 190022652019**

| | |
|---|---|
| குற்றமுறையிடுபவர் | அரசுக்காக ஸ்ரீரங்கம் காவல் நிலையம், காவல் ஆய்வாளர் அவர்கள், குற்ற எண்.838/2012 |
| குற்றஞ்சாட்டப்பட்டவர் | எதிரிகள் :<br>1) திரு. நடராஜன் த/பெ. தங்கவேல் (வயது 62/12)<br>2)திருமதி.சரஸ்வதி க/பெ.நடராஜன் (வயது 57/12) |
| குற்றப்பிரிவு | இ.த.ச. பிரிவுகள் 286 of IPC r/w 9(B)(1)(b) Explosive Substance Act 1884 |
| வனையப்பட்டது | இ.த.ச. பிரிவுகள் 286 of IPC r/w 9(B)(1)(b) Explosive Substance Act 1884 |
| தண்டிக்கப்பட்டது | **எதிரிகள் ஆஜர் . திறந்த நீதிமன்றத்தில் தீர்ப்புரை பகரப்பட்டது .**<br>**இறுதியாக, அரசு தரப்பில் 1,2 எதிரிகள் மீது இதச பிரிவு 286 of IPC r/w 9(B)(1)(b) Explosive Substance Act 1884–ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்தார்கள் என அரசு தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யாததால் சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி எதிரிகளை குற்றவாளி இல்லையென முடிவு செய்து கு /வி/மு/ச 248(1)–ன் கீழ் எதிரிகளை விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது .** |
| தீர்மானம் | எதிரிகள் குற்றவாளி இல்லை |

குற்றம்சாட்டப்பட்டவர் விபரம்

| வ. எண் | பெயர் | த/பெ. | மதம் | தொழில் | குடியிருப்பு | வயது |
|---|---|---|---|---|---|---|
| 1 | திரு. நடராஜன் | திரு.தங்கவேல் | இந்து | கூலி | டி2, சிவா கார்டன் கீழ உள்வீதி, | 62/12 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | திருவானைக்கோவில், திருச்சி | |
| 2 | திருமதி.சரஸ்வதி | திரு.நடராஜன் | இந்து | கூலி | டி2, சிவா கார்டன் கீழ உள்வீதி, திருவானைக்கோவில், திருச்சி | 57/12 |

தேதி விவரங்கள்:–

| | | |
|---|---|---|
| நிகழ்வு நாள் | : | 27.09.2012 |
| புகார் | : | 27.09.2012 |
| கைது தேதி | : | 27.09.2012 |
| பிணை விடுவிப்பு | : | 27.09.2012 |
| Committal | : | N.A |
| விசாரணை துவக்கம் | : | 04.02.2013 |
| விசாரணை முடிவு | : | 06.10.2023 |
| எதிரி காவலில் இருந்த நாட்கள் | : | N.A |
| இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட தேதி | : | 18.01.2013 |
| Date of Questioning | : | 04.02.2013 |
| இடையீட்டு மனுக்கள் மற்றும் அதன் முடிவு | : | |
| சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்த தேதிகள் | : | PWs Chief — Cross<br>1. 17.12.2019 — 17.12.2019<br>2. 17.12.2019 — 17.12.2019<br>3. 01.04.2022 — 01.04.2022<br>4. 01.04.2022 — 01.04.2022<br>5. 01.07.2022 — 01.07.2022<br>6. 14.10.2022 — 14.10.2022<br>7. 01.12.2022 — 01.12.2022<br>8. 03.10.2023 — 03.10.2023 |
| சட்டப்பிரிவு 313(1)(b) கு.வி.மு.ச – விசாரணை தேதி | : | 05.10.2023 |
| தலைமறைவு எதிரிகளின் விபரம் அவர்கள் கைது செய்த விவரம் ஆஜர்படுத்தப்பட்ட விபரம் | : | Nil |

| | | |
|---|---|---|
| மேலவை நீதிமன்றங்களால் தடையாணை வழங்கப்பட்ட விவரம் அதன் முடிவு | : | Nil |
| காலதாமதத்திற்கான காரணம் | : | Nil |

இவ்வழக்கானது திருச்சிராப்பள்ளி நீதித்துறை நடுவர் எண் .3 ல் CC. No. 07/2003 ஆக கோப்பில் எடுக்கப்பட்டு பின்னர் மாறுதல் மூலம் கடந்த அன்று CC. No. 291/2019 ஆக இந்நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு, கடந்த 13.10.2023 அன்று என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது அரசு தரப்பில் அரசு குற்றவியல் வழக்கறிஞர் நிலை 2 அவர்கள் ஆஜராகியும் எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.E.S.சிவசங்கரன்,B.Sc.,B.L., அவர்கள் ஆஜராகியும் இரு தரப்பு வாதங்களை கேட்டும் , ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

**<u>தீர்ப்புரை</u>**

இவ்வழக்கானது புகார்தாரரால் குற்றவியல் விசாரணை முறைச்சட்டப்பிரிவு 173(2)–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட இறுதி அறிக்கையின்படி எழுந்த வழக்காகும்.

2. **குற்ற முறையீட்டாளரின் சுருக்கம்:–**

கடந்த 27.09.2012ம் தேதி காலை 08.30 மணிக்கு , திருச்சி மாநகரம் ஸ்ரீரங்கம் காவல் நிலைய சரகத்திற்குட்பட்ட திருவானைக்கோவில், கீழ உள் வீதியில் உள்ள டி 2, சிவா கார்டனில் எதிரிகளின் வீட்டில் வருகின்ற தீபாவளி பண்டிகை பட்டாசுகளை வியாபாரம் செய்ய வேண்டும் என்றும், எளிதில் தீப்பற்றி மனித உயிருக்கு ஆபத்து விளைவிக்கக்கூடிய பொருள் சேதம் ஏற்படுத்தக்கூடிய பொருட்களை அசட்டையாக உரிமம் இல்லாமலும் , பாதுகாப்பு இன்றி 31 அட்டைபெட்டிகள் வைத்துள்ளதாகவும் , எதிரிகள் இருவரும் மனித உயிருக்கு ஆபத்தை விளைவிக்கக்கூடிய குற்றம் புரிந்ததாக இதச பிரிவுகள் 286 of IPC r/w 9(B)(1)(b) Explosive Substance Act 1884–ன் கீழ் குற்றம் என்று இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

3. குற்றப்பத்திரிக்கை கோப்பிற்கு எடுக்கப்பட்டு , எதிரிகளுக்கு அழைப்பாணை சார்பு செய்யப்பட்டு எதிரிகள் முன்னிலையான உடன் அவருக்கு வழக்காவணங்களின் நகல் கு .வி.மு.ச பிரிவு 207–ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டு, போதிய கால அவகாசத்திற்கு பின்பு, வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து , இருதரப்பு கேட்கப்பட்டும் எதிரிகளுக்கு எதிராக கு.வி.மு.ச. பிரிவுகள் 286 of IPC r/w 9(B)(1)(b) Explosive Substance Act 1884–ன்கீழ் குற்றசாட்டு வனைந்து அவர்களிடம் விளக்கி வினவியபோது எதிரிகள் பொய்வழக்கு குற்றவாளி இல்லை என கூறியதால் அரசு தரப்பு சாட்சி விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

4. **விசாரணை**:–

அரசு தரப்பில் அ .சா.1 முதல் அ .சா.8 வரையான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளது. அ.சா.ஆ.1 முதல் அ .சா.ஆ. 5 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது . எதிரிகள் தரப்பில் சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

5. **அரசு தரப்பு சாட்சியத்தின் சுருக்கம்** :–

(1) அ.சா.1 திரு.ராஜேந்திரன் தனது சாட்சியத்தில் ஏ .வி.எஸ் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருவதாகவும் , கடந்த 27.09.2012 ம் ஆண்டு ஸ்ரீரங்கம் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராக பணிபுரிந்து கொண்டிருந்த போது உதவி ஆய்வாளர் அவர்களுடன் தலைமைக் காவலர் 2262, 2026 சேர்ந்து ரோந்து அலுவலராக சென்று கொண்டிருந்த போது ஆய்வாளருக்கு கிடைத்த ரகசிய தகவலின் படி சிவா கார்டன் என்ற இடத்தில் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு வெடிபாக்ஸ் விற்பதாக ஆய்வாளரிடம் கூறியதாகவும் , ஆய்வாளர் கிராம நிர்வாக அலுவலருடன் சேர்ந்து சோதனை செய்த போது அட்டைப் பெட்டியில் பலதரப்பட்ட வெடி பட்டாசுக்கள் இருந்ததாகவும், ஆய்வாளர் அவர்கள் உச்ச நீதிமன்ற உத்தரவின் படி தகவல் கூறி 10.00 மணிக்கு கைது செய்து வெடிப்பொருட்கள் பாதுகாப்பாக அவரது வீட்டில் வைத்து சீல் வைத்து பாதுகாப்பாக வீட்டில் காவலில் வைத்ததாகவும் , 14.30

மணிக்கு நிலையம் வந்து வழக்கு பதிவு செய்ததாகவும், இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் தன்னை விசாரித்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

(2) அ.சா.2 திரு.ராஜேஷ்கண்ணன் தனது சாட்சியத்தில் தில்லைநகர் காவல் நிலையத்தில் தலைமைக் காவலாராக பணிபுரிந்து வருவதாகவும், கடந்த 27.09.2012 ம் ஆண்டு ஸ்ரீரங்கம் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராக பணிபுரிந்து கொண்டிருந்த போது உதவி ஆய்வாளர் அவர்களுடன் தலைமைக் காவலர் 1158, 2026 சேர்ந்து ரோந்து அலுவலராக சென்று கொண்டிருந்த போது ஆய்வாளருக்கு கிடைத்த ரகசிய தகவலின் படி சிவா கார்டன் என்ற இடத்தில் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு வெடிபாக்ஸ் விற்பதாக ஆய்வாளரிடம் கூறியதாகவும் , ஆய்வாளர் கிராம நிர்வாக அலுவலருடன் சேர்ந்து சோதனை செய்த போது அட்டைப் பெட்டியில் பலதரப்பட்ட வெடி பட்டாசுக்கள் இருந்ததாகவும் , ஆய்வாளர் அவர்கள் உச்ச நீதிமன்ற உத்தரவின் படி தகவல் கூறி 10.00 மணிக்கு கைது செய்து வெடிப்பொருட்கள் பாதுகாப்பாக அவரது வீட்டில் வைத்து சீல் வைத்து பாதுகாப்பாக வீட்டில் காவலில் வைத்ததாகவும், 14.30 மணிக்கு நிலையம் வந்து வழக்கு பதிவு செய்ததாகவும், இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் தன்னை விசாரித்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

(3)அ.சா.3 திரு.முருகேசன் தனது சாட்சியத்தில் அரியமங்களம் காவல் நிலையத்தில் தலைமை காவலாராக பணிபுரிந்து வருவதாகவும், முன்பு ஸ்ரீரங்கம் காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக பணிபுரிந்ததாகவும், கடந்த 27.9.2012 அன்று தானும் தலைமை காவலர் திரு .ராஜேந்திரன், தலைமை காவலர் 2262 திரு.ராஜேஷ்கண்ணன் ஆகியோரும் காவல் ஆய்வாளருடன் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் ரோந்து பணிக்கு சென்ற போது ஆய்வாளருக்கு வந்த தகவல் படி D2 சிவன் கார்டன் கீழ உள்வீதி திருவானைக்கோவில் முகவரிக்கு சென்ற போது சரஸ்வதி என்பவரிடம் விசாரித்தபோது அவர் கணவர் திருவானைக்கோவில்

கடைவீதியில் ஆனந்தா மளிகை கடை நடத்திவருதாகவும், அவர்கள் சிவகாசியில் இருந்து பட்டாசு வாங்கி வந்து வருடம் தோறும் விற்பது வழக்கம் என்று சொன்னதாகவும், மேலும் அந்த வீட்டை சோதனை செய்தபோது 30 வெடி பாக்ஸ்கள் கைப்பற்றப்பட்டதாகவும் , அந்த கைப்பற்றுதல் வீடியோ மூலமாக பதிவு செய்ததாகவும், பிறகு காவல் நிலையம் அழைத்து வந்து ஆய்வாளர் வழக்கு பதிவு செய்ததாகவும் அ.சா.3 சாட்சியம் அளித்துள்ளார்.

(4) அ.சா.4 திரு.சுந்தரேசன் தனது சாட்சியத்தில் கடந்த 27.9.2012 அன்று ஸ்ரீரங்கம் காவல் நிலையத்திலிருந்து தன்னை போட்டோ எடுக்க அழைத்ததாகவும், தான் திருவானைக்கோவில் சிவா கார்டனில் பட்டாசுகள் இருந்ததை ஆய்வாளர் புகைப்படம் எடுக்க சொன்னதாகவும் தான் புகைப்படங்களை எடுத்து பிரின்ட் போட்டு ஆய்வாளரிடம்த ஒப்படைத்ததாகவும் இந்த வழக்கு சம்பந்தமாக ஆய்வாளர் தன்னை விசாரித்ததாகவும் அ .சா.4 சாட்சியம் அளித்துள்ளார்.

(5) அ.சா.5 திரு.குமார் தனது சாட்சியத்தில் திம்மராய சமூத்திரம் கிராம நிர்வாக அலுவலராக பணி புரிந்ததாகவும், முன்பு 2012 ம் ஆண்டு வெள்ளித்திருமுத்தம் கிராம நிர்வாக அலுவலகத்தில் கிராம உதவியாளராக பணிபுரிந்ததாகவும், கடந்த 27.09.2012 அன்று தானும் கிராம நிர்வாக அலுவலரும் அலுவலகத்தில் இருந்தபோது ஸ்ரீரங்கம் காவல் நிலையத்திலிருந்து காவலர் வந்து தங்களை ஆய்வாளர் அழைப்பதாக கூறியதாகவும் தாங்கள் இருவரும் திருவானைக்கோவில் கீழ் உள்வீதிக்கு சென்றதாகவும் , எதிரியின் வீட்டில் வெடி பொருட்கள் பட்டாசுக்கள் இருந்ததாகவும் , அப்போது அங்கு இருந்த பட்டாசு கட்டுக்களை ஆய்வாளர் லிஸ்ட் போட்டு பறிமுதல் செய்ததாகவும், தான் அப்போது அந்த சோதனை பட்டியலில் சாட்சியாக கையெழுத்து செய்தாகவும், தன்னுடன் கிராம நிர்வாக அலுவலரும் சாட்சியாக கையெழுத்து போட்டனர் என்றும் இந்த வழக்கு சம்பந்தமாக ஆய்வாளர் தன்னை விசாரித்ததாகவும் அ .சா.5 சாட்சியம் அளித்துள்ளார்.

(6) அ.சா.6 திரு.நரசிம்மன் தனது சாட்சியத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து ஓய்வு பெற்று விட்டதாகவும் , கடந்த 27.9.2012 அன்று அலுவலகத்தில் இருந்த போது ஸ்ரீரங்கம் காவல் நிலைய ஆய்வாளர் திருவானைக்கோவில் கீழ உள்வீதியில் சிவா கார்டனில் வெடிபொருட்களை மறைத்து வைத்திருப்பதாகவும் , அதனை கைப்பற்ற தன்னை உதவியாளரையும் சாட்சிகளாக அழைத்ததின் பேரில் தானும் உதவியாளர் குமாரும் திருவானைக்கோவில் கீழ உள் வீதியில் உள்ள சிவா கார்டனுக்கு சென்றனர் என்றும், அங்கு சரஸ்வதி நடராஜன் வீட்டில் 31 அட்டை பெட்டிகளில் வெடி பொருட்கள் மறைத்து வைத்திருந்தனர் என்றும் , அதனை காவல் ஆய்வாளர் சோதனை செய்தனர் என்றும் , 31 பெட்டிகளையும் ஆய்வாளர் ஜாபிதாவில் கைப்பற்றினர் என்றும் , போட்டோகிராபர் போட்டோ மற்றும் வீடியோ எடுத்தனர் என்றும் , தானும் உதவியாளர் குமாரும் சாட்சிகளாக கையெழுத்து செய்தனர் என்றும், சரஸ்வதி மற்றும் நடராஜனும் அதில் கையெழுத்து செய்தனர் என்றும், தன்னிடம் காட்டப்படுவது அந்த சோதனை ஜாபித தான் என்றும் அதில் உள்ளது தன்னுடைய கையெழுத்து தான் என்றும் இந்த வழக்கு சம்பந்தமாக ஆய்வாளர் தன்னை விசாரித்ததாகவும் அ.சா.6 சாட்சியம் அளித்துள்ளார்.

(7) அ.சா.7 திரு.பாலுச்சாமி தனது சாட்சியத்தில் திருச்சி மாநகர உளவு பிரிவில் ஆய்வாளராக பணிபுரிந்து வருவதாகவும் , கடந்த 2012 ம் ஆண்டு தான் ஸ்ரீரங்கம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்தபோது 27.09.2012 அன்று தான் 1158 திரு.ராஜேந்திரன், தலைமை காவலர் 2262 திரு.ராஜேஷ்கண்ணன் முதல்நிலை காவலர் 2026 திரு.முருகேசன் ஆகியோருடன் ரோந்து அலுவலில் சென்ற போது அன்றைய தினம் 08.30 மணிக்கு தனது ரகசிய தகவலாளி ஸ்ரீரங்கம் திருவானைக்கோவில் கிழக்கு உள்வீதி சிவா கார்டன் D2 வீட்டில் வெடி பொருட்கள் பதுக்கி வைக்கப்பட்டுள்ளது என்றும் , தான் தகவல் கிடைத்தவுடன் மேற்படி பொருட்களை அழித்துவிடவ ,

மறைத்துவிடவோ கூடும் என்பதால் கனம் நீதித்துறை நடுவர் எண் . 3 நீதிமன்றத்திற்கு முன் தகவல் கடிதம் அனுப்பினர் என்றும் , மேற்படி சிவா கார்டன் நெ.D2 வீட்டிற்கு சென்று பெட்டிகள் அனைத்தையும் நிலையம் கொண்டு வந்தால் பாதுகாப்பு இல்லையென்று கருதி அதே இடத்தில் வைத்து பூட்டி சாட்சிகள் முன்னிலையில் SHO Seal வைத்தனர் என்றும் , மேற்படி இடத்தில் SSI கேசவன் மற்றும் தலைமை காவலர் 1748 சீராளன் பாதுகாப்பிற்காக நியமிக்கப்பட்டார் என்றும், மேற்படி 14.30 மணிக்கு எதிரியை நிலையம் அழைத்து வந்து நிலைய குற்ற எண்.838/2012 சட்டப்பிரிவுகள் 286 இதச r/w 9(B)(1)(b) of Explosive Substance Act 1884 படி வழக்கு பதிவு செய்தனர் என்றும் அந்த அறிக்கையை அ .சா.ஆ 3 அச்சுமுதல் தகவல் அறிக்கை என்றும் அ.சா.7 சாட்சியம் அளித்துள்ளார்.

(8) அ.சா.8 திரு.நிக்சன் தனது சாட்சியத்தில் திருச்சி மாநகர பாலக்கரை காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருவதாகவும் இதற்கு முன் உறையூர் காவல் நிலைய ஆய்வாளராக பணிபுரிந்த போது ஸ்ரீரங்க குற்ற எண் . 838/2012 சட்டபிரிவு 286 இதச r/w 9(B)(1)(b) Explosive Substance Act 1884 படி பதிவு செய்த வழக்கின் முதல் விசாரணையை முடித்து இறுதி அறிக்கையை தாக்கல் செய்வதற்காக வழக்கு கோப்பு தன் பார்வைக்கு வைக்கப்பட்டதாகவும், மேற்படி வழக்கை 01.10.2012 அன்று மேல் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று சாட்சிகளை விசாரணை செய்ததில் ஏற்கனவே ஆய்வாளர் திரு .பாலுச்சாமி அவர்களிடம் அளித்த வாக்கு மூலங்களையே அளித்ததால் தான் மீண்டும் மறுவாக்கு மூலம் பதிவு செய்யவில்லை என்றும் , ஏற்கனவே விசாரணை செய்த திரு .பாலுச்சாமி அவர்கள் படிவம் எண் .91 ன் மூலம் வழக்கு சொத்துக்களை கைப்பற்றி நீதிமன்றத்தில் தாக்கல் செய்தனர் என்றும் , அந்த படிவம் 91 அ.சா.ஆ 4 கைப்பற்றியது குறித்தும், வழக்கு சொத்து வெடி பொருள் என்பதால் பாதுகாப்பு கருதி நீதித்துறை நடுவர் எண்.3 ன் மூலமாக கடித எண். 3235/12 மூலமாக பொது மேலாளர் காளீஸ்வரி Fire Works தனியார் வெடி மருந்து கிடங்கு

சேதுராப்பட்டி திருச்சிராப்பள்ளி பாதுகாப்பு கடிதம் மற்றும் ஒப்புகை அரசு தரப்பு சான்றாவாணம் 5 ஆக குறியீடு செய்தது குறித்தும் பின்னர் அவரது புலன் விசாரணையை முடித்து எதிரியான உங்களுக்கு எதிராக சட்டபிரிவு 286 இதச r/w 9(B)(1)(b) Explosive Substance Act 1884 ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தது குறித்தும் அ.சா.8 சாட்சியம் அளித்துள்ளார்.

9. **கு.வி.மு.ச பிரிவு 313–ன் படியான நடவடிக்கை:–**

அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிகளுக்கு பாதகமாகத் தோன்றிய சந்தர்ப்பங்கள் குறித்து கு .வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)–ன் படி கேள்விகள் கேட்க , எதிரிகள் அதை மறுத்துக் கூறினார் . எதிரிகள் தரப்பில் சாட்சியம் எதுவும் முன்வைக்கப்படவில்லை . இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது.

10. **தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை:–**

இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டியது எதிரிகளின் செய்கையானது இதச பிரிவுகள் சட்டபிரிவு 286 இதச r/w 9(B)(1)(b) Explosive Substance Act 1884 ன் கீழ் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

11. **தீர்வு** :–

I) கடந்த 27.09.2012 ம் தேதி காலை 08.30 மணிக்கு, திருச்சி மாநகரம் ஸ்ரீரங்கம் காவல் நிலைய சரகத்திற்குட்பட்ட திருவானைக்கோவில் , கீழ உள் வீதியில் உள்ள டி 2, சிவா கார்டனில் எதிரிகளின் வீட்டில் வருகின்ற தீபாவளி பண்டிகை பட்டாசுகளை வியாபாரம் செய்ய வேண்டும் என்றும் , எளிதில் தீப்பற்றி மனித உயிருக்கு ஆபத்து விளைவிக்கக்கூடிய பொருள் சேதம் ஏற்படுத்தக்கூடிய பொருட்களை அசட்டையாக உரிமம் இல்லாமலும், பாதுகாப்பு இன்றி 31 அட்டைபெட்டிகள் வைத்துள்ளதாகவும், எதிரிகள் இருவரும் மனித உயிருக்கு ஆபத்தை விளைவிக்கக்கூடிய குற்றம் புரிந்ததாக இதச பிரிவுகள் 286 of IPC r/w 9(B)(1)(b) Explosive Substance Act 1884–ன் கீழ் குற்றம் என்பது அரசு தரப்பு வழக்காகும்.

ii) அரசு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதுரையின் போது அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ .சா.8 சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டுள்ளது என்றும் ,

எதிரிகளிடம் இருந்து வழக்கு சொத்து கைப்பற்றபட்டுள்ளது என்பதற்கு சோதனை ஜாபிதா குறியீடு செய்யப்பட்டுள்ளது . வழக்கு சொத்து எதிரிகளிடம் இருந்து கைப்பற்றப்பட்டுள்ளதால் அதிகப்பட்ச தண்டனை வழங்க வேண்டினார்.

iii) எதிரிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதுரையின் போது அரசு தரப்பில் குற்றப்பிரிவு மற்றும் வழக்கு சொத்து பற்றி சரிவர நிரூபிக்கவில்லை. தனி நபர் சாட்சி முன்னிலைப்படுத்தப்படவில்லை வழக்கு சொத்தை நீதிமன்ற சாட்சியத்தின் மூலம் சான்று பொருளாக குறியீடு செய்யவில்லை அரசு தரப்பில் எழும் சந்தேகத்தை எதிரிகளுக்கு வழங்கி எதிரிகளை விடுதலை செய்யகோரினார்.

iv) அ.சா.1 தான் காவல் ஆய்வாளர்க்கு கிடைத்த ரகசிய தகவல் கிடைக்கப்பெற்று சிவ கார்டன் என்ற இடத்தில் சென்றபோது 2ம் எதிரி அவரது வீட்டில் தீபாவளியை முன்னிட்டு வெடிபாக்ஸ் வியாபாரத்திற்கு வாங்கி வைத்திருப்பதாக கூறினார் என்று முதல் விசாரணையில் சாட்சியம் அளித்துள்ளார் குறுக்கு விசாரணையில் 2ம் எதிரிக்கு பாத்தியப்பட்டது என்பதற்கு ஆவணம் கைப்பற்றவில்லை என்றால் சரிதான் . வெடிபொருள்கள் மற்றும் மூலப்பொருட்கள் தனிதனியாக இல்லை என்றால் சரிதான் . அ.சா.2 மற்றும் அ.சா.3 குறுக்கு விசாரணையில் வெடி என்று தான் சொல்வது பொது மக்கள் பயன்படுத்தும் வெடி என்றால் சரிதான் . அது தீபாவளிக்கு வெடிக்கும் வெடி என்றால் சரிதான். அ.சா.4 வீடியோ கிராபர் குறுக்கு விசாரணையில் புகைப்படம் மட்டும் கொடுத்தேன் என்று சாட்சியம் அளித்துள்ளார் . சோதனை ஜாபிதாவில் சாட்சி கையெழுத்து செய்த அ .சா.5 குறுக்கு விசாரணையில் என்ன என்ன எழுதப்பட்டிருந்தது என்று தெரியாது என்றால் ஆமாம் . அ.சா.6 அங்கு நாங்கள் சென்ற போது கும்பலாக இருந்தது நாங்கள் சுமார் 2 மணிநேரம் அங்கு இருந்தபோது அந்த சமயத்தில் யாரவது வெடிபொருட்கள் பட்டாசு கேட்டு வந்தனரா என்றால் இல்லை. வெடி பெட்டிகளை திறந்து காட்டினார்கள் அது தீபாவளி பட்டாசுகள் 30 பெட்டிகளிலும் தீபாவளி பட்டாசுகள் இருந்தன என்றால் ஆமாம். அ.சா.7 காவல் ஆய்வாளர் குறுக்கு விசாரணையில் எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் வாங்கவில்லை என்றால் சரிதான் . அந்த வீட்டின் உரிமையாளர் பற்றி விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான் . வீடியோ எடுத்தாக சொல்லியுள்ளேன் அது சம்மந்தமான ஆவணம் தாக்கல் இல்லை என்றால் சரிதான். அ.சா.8 காவல் ஆய்வாளர் குறுக்கு விசாரணையில் 31 பெட்டிகளில் உள்ள வெடிபொருட்கள் அனைத்தும் தீபாவளி பட்டாசுகள் என்றால் தவறு வெடிபொருட்கள்தான் அபாயகரமானது. சம்பவ இடத்திற்குரிய நபரை சாட்சியாக விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான்.

v) அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியத்தில் இருந்து அ .சா.7 உடன் சென்ற போலீஸார் சாட்சிகளான அ.சா.2 மற்றும் அ.சா.3 எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் வாங்கியதாக சாட்சியம் அளித்துள்ளார்கள் அ .சா.7 எதிரியிடம் இருந்து ஒப்புதல் வாக்குமூலம் வாங்கவில்லை என்று அ .சா.2 மற்றும் அ .சா.3 சாட்சியத்திற்கு முரணாக சாட்சியம் அளித்து எதிரிக்கு எதிராக ஒப்புதல் வாக்குமூலம் தாக்கல் செய்வில்லை என்பதால் 1ம் எதிரியை சம்பவ இடத்தில் கைது செய்து ஒப்புதல் வாக்குமூலம் வாங்கப்பட்டதா இல்லையா என்பதை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடம் இன்றி பெய்ப்பிக்கப்படவில்லை.

vi) சோதனை ஜாபிதா சாட்சிகள் அ .சா.5 மற்றும் அ .சா.6 சம்பவ இடத்தில் வருவதற்கு முன்பாகவே 2ம் எதிரியை கைது செய்து வைத்துள்ளார்கள் என்பதால் வெடி பொருட்களை கைப்பற்றும் போது உடன் இருந்தவர்கள் அ .சா.5 அதில் என்ன என்ன எழுதப்பட்டு இருந்தது என்பது தெரியாது என்றால் ஆமாம் என்றும், அ.சா.6 31 பெட்டிகளிலும் தீபாவளி பட்டாசுகள் இருந்தன என்றால் ஆமாம் சம்பவ இடத்தில் வழக்கு சொத்தை கைப்பற்றியபோது அ .சா.5 மற்றும் அ.சா.6 உடன் இருந்தார்களாக என்பதை அரசு தரப்புல் சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.

vii) அரசு தரப்பில் அ.சா.4 புகைப்படமாக கொடுத்தாக சாட்சியம் அளித்துள்ளார் அ.சா.7 புகைப்படத்தை ஆவணமாக தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் என்று சாட்சியம் அளித்து வழக்கு சொத்தை கைப்பற்றியபோது எடுக்கப்பட்ட புகைப்படத்தை ஆவணமாக தாக்கல் செய்யாதற்கு அரசு தரப்பில் காரணம் கூறாதால் வழக்கு சொத்து கைப்பற்றியதாக சொல்லுவது சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. அ.சா.8 சாட்சி அபாயகரமான வெடிபொருட்கள் என்றும் மற்ற அரசு தரப்பு சாட்சிகள் அனைவரும் தீபாவளி வெடிபொருட்கள் என்று சாட்சியம் அளித்திருப்பதை நிரூபிப்பதற்கு வழக்கு சொத்தை அரசு தரப்பில் பரிசோதனைக்கு உட்படுத்தவில்லை என்பதால் அ .சா.8 சாட்சி கூறும் வழக்கு சொத்து அபாயகரமான வெடிபொருட்கள் என்பதை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு மெய்பிக்கவில்லை.

viii) சம்பவ இடம் குறித்து அரசு தரப்பில் பார்வை மகஜர் மற்றம் வரைப்படம் தாக்கல் செய்யப்படவில்லை என்பதால் சம்பவ இடம் குறித்து அரசு தரப்பில் சந்தேகத்தை ஏற்படுத்துகிறது . அ.சா.6 கிராம நிர்வாக அதிகாரி சம்பவ இடம் வரும்போது கும்பலாக இருந்ததாக சாட்சியம் அளித்துள்ள நிலையில் தனிநபர்

சாட்சி அரசு தரப்பில் விசாரணை செய்யவில்லை என்பதும் பெறுத்த சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. வெடி பொருட்கள் இருந்ததாக சொல்லும் சிவா கார்டன் யாருடையது அதன் உரிமையாளர் விசாரணை செய்து சாட்சியாக முன்னிலைப்படுத்தாது பெறுத்த சந்தேகத்தை ஏற்படுத்துகிறது . தீபாவளிக்கு பயன்படுத்தும வெடி பொருட்கள் என்பதால் அரசு தரப்பில் கைப்பற்ற வெடிபொருட்கள் சம்பவ இடத்தில் கைப்பற்றபட்டது என்பது சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. இந்த வழக்கை விசாரணை செய்வதற்கு மாவட்ட ஆட்சியரிடம் அனுமதி பெறவில்லை. சம்பவ இடத்தில் கைபற்றபட்ட வெடிபொருட்களை அதே இடத்தில் போலீஸார் பாதுகாப்பில் வைத்து இருந்துவந்து இருப்பதாக வழக்கில் கூறியிருப்பது வழக்கு சொத்து அபாயகரமானவை இல்லை என்பதை தெரியப்படுத்துவதாக அமைகிறது. கைப்பற்றபட்ட வழக்கு சொத்து எத்தனை கிலோ என்பதை அரசு தரப்பில் குறிப்பிடபடவில்லை . அ.சா.7 உதவி ஆய்வாளர் புகார்தாராகவும், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த காவல் அதிகாரியாகவும் , சாட்சிகளை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளதின் அடிப்படையில் அ.சா.8 இறுதியறிக்கை தாக்கல் செய்திருப்பது இயற்கை நீதிக்கு புறம்பானது. இந்த சட்டத்தில் விதிமுறைப்படி தீபாவளி சமயத்தில் ஒரு நபர் வரையறுக்கப்பட்ட அளவில் தீங்கு இல்லாத வெடிபொருட்கள் பயன்பாட்டில் வைத்திருக்கலாம் என்பது சட்ட விதி அரசு தரப்பில் அந்த விதிக்கு புறம்பாக வெடி பொருட்கள் எதிரிகள் வைத்திருந்தார்கள் என்பதை சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்பதால் மேற்படி சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்க இந்நீதிமன்றம் முடிவுசெய்கிறது . எனவே சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி எதிரிகளை இந்த வழக்கில் இருந்து விடுதலை செய்ய இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

இறுதியாக, அரசு தரப்பில் எதிரிகள் மீது இதச பிரிவுகள் 286 of IPC r/w 9(B)(1)(b) Explosive Substance Act 1884–ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்தார்கள் என அரசு தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யாததால் சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி எதிரிகளை குற்றவாளி இல்லையென முடிவு செய்தும், கு/வி/மு/ச 248(1)–ன் கீழ் எதிரிகளை விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

எதிரிகள் எழுதிக் கொடுத்துள்ள பிணையப்பத்திரமும் மேல்முறையீட்டு காலத்திற்கு பின் ரத்தாகிவிடும் என்று இந்நீதிமன்றம் உத்தரவிடப்படுகிறது.

இவ்வழக்கில் திருச்சிராப்பள்ளி நீதித்துறை நடுவர் எண் .3 ல் R.P. No.385/2012 ஆக தாக்கல் செய்யப்பட்ட பட்டாசுகள் அடங்கிய காக்கிகலர் அட்டை பெட்டிகள் (31) பொது மேலாளர், காளிஸ்வரி பயர் ஒர்க்ஸ், தனியார் வெடி மருந்து கிடங்கு சேதுராப்பட்டி திருச்சிராப்பள்ளி D.No.3535/2012 கடிதத்தின் படி பாதுகாப்பில் இருந்து வருவதை வெடிபொருட்கள் அழிக்கபயன்படுத்தும் விதிப்படி மேல்முறையீட்டு காலத்திற்கு பின் அழித்துவிட உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு , என்னால் திருத்தம் செய்யப்பட்டு , 2023–ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 25 ஆம் நாளாகிய இன்று என்னால் அவையறிய பகரப்பட்டது.

C KARUPPASAMY

Digitally signed by C KARUPPASAMY
Date: 2023.10.25 16:48:57 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நீதித்துறை நடுவர் ,
ஸ்ரீரங்கம்

இணைப்பு :

**அரசு தரப்பு சாட்சிகள்:–**

அ.சா 1 : திரு. ராஜேந்திரன்

அ.சா 2 : திரு.ராஜேஷ்கண்ணன்

அ.சா 3 : திரு.முருகேசன்

அ.சா 4 : திரு.சுந்தரேசன்

அ.சா 5 : திரு.குமார்

அ.சா 6 : திரு.நரசிம்மன்

அ.சா 7 : திரு.பாலுச்சாமி

அ.சா 8 : திரு.நிக்சன்

**அரசு தரப்பில் குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்கள்:–**

அ.சா.ஆ. 1 : 27.09.2012 புகார் மனு

அ.சா.ஆ. 2 : 27.09.2012 சோதனை ஜாபிதா

அ.சா.ஆ. 3 : 27.09.2012 அச்சு முதல் தகவல் அறிக்கை

அ.சா.ஆ. 4 : 01.10.2012 படிவம் 91

அ.சா.ஆ. 5 : 28.09.2012 நீதித்துறை நடுவர் எண்.3 ன் கடிதம்
வெடிப்பொருட்களின் சோதனை கிடங்கு

அரசு தரப்பில் குறியீடு செய்யப்பட்ட சான்று பொருள்கள்:–இல்லை

எதிரி தரப்பில் சாட்சிகள் :– இல்லை

எதிரி தரப்பில் சான்றாவணம் :– இல்லை

C KARUPPASAMY

Digitally signed by C KARUPPASAMY
Date: 2023.10.25 16:49:10 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
ஸ்ரீரங்கம்

நகல்கள்

1. மேதகு தலைமை நீதித்துறை நடுவர் அவர்கள் , திருச்சி பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
2. அரசு தரப்பில் உதவி குற்றத்துறை வழக்கறிஞர் நிலை எண்.1, ஸ்ரீரங்கம்
3. காவல் ஆய்வாளர், ஸ்ரீரங்கம் காவல் நிலையம்.

குறிப்பு

அரசு தரப்பு சாட்சிகள் யாரும் ஒரு நாளைக்கு மேல் நிற்க வைக்கப்படவில்லை.